பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 08 வியாழக்கிழமை 21.03.2024 கதிர் 135

# கோப் குழுவிலிருந்து மேலும் மூவர் விலகல்

அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவிலிருந்து மேலும் மூவர் இராஜினாமா செய்துள்ளதுடன், அக் குழுவிலிருந்து இன்று வரை ஒன்பது உறுப்பினர்கள் தமது பதவிகளிலிருந்து விலகினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுரகுமார திசாநாயக்க, வசந்த யாப்பா பண்டார, மற்றும் துமிந்த திசாநாயக்க ஆகியோரும் தமது உறுப்பினர் பதவியிலிருந்து நேற்று விலகிச் சென்றனர்.

கோப் குழு தலைவராக பொது ஜனபெரமுன உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

பஸில் ராஜபக்ச நாடு திரும்பியதும் கட்சியை மீளக் கட்டமைக்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருக்கிறார். பஸில் நாடு திரும்பும் வரை கட்சியிலிருந்து எட்ட இருந்தார்கள் என்று கருதப்பட்ட, இன்னும் சொல்லப் போனால் ரணில் விக்கிரமசிங்கவின் தீவிர ஆதரவாளர்களாகப் போய்விட்டார்களோ என்று கருதப்பட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க போன்றவர்கள் ஓ-டிச் சென்று பஸிலை விமான நிலையத்திலேயே வரவேற்று தமது விசுவாசத்தைக் காட்டினர். இதனால் இதுவரை ரணிலின் பக்கம் இருப்பார்கள் என்று எண்ணப்பட்ட பலரது நிலைமையும் கேள்விக்குறியாகியிருந்தது.

நேற்று பெரமுனவின் கட்சிக் ☞ 2

## ஏப்ரல் 5 முதல் மேலும் வெப்பம் அதிகரிக்கும்

ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதியில் இருந்து அதிக வெப்பமான வானிலையை எதிர்பார்க்கலாம் என சமுத்திரவியல் விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எல்-நினோ தாக்கத்தினால் பருவமழையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குருநாகலில் அதிக வெப்பநிலையாக 36.1 பாகை செல்சியஸ் பதிவானது. இரத்தினபுரி மாவட்டத்தில் 35.4 பாகை செல்சியஸாக வெப்பநிலை பதிவானது.

வடமேற்கு, வடமத்திய, கிழக்கு ☞ 8

## 2 பிக்குகள் உட்பட 29 பேர் நேற்றுக் கொழும்பில் கைது

### ஆளும் தரப்புக்கு எதிராக போராட்டம் நடத்தியோர்



கொழும்பு - புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆளும்தரப்பை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டத்தின்போது இருபிக்குகள் உள்ளிட்ட 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொருட்களின் விலையேற்றம், வெளிநாட்டு ஒப்பந்தங்கள் உள்ளிட்ட பல பிரச்சினைகளை முன்வைத்து முன்னிலை சோசலிசக் கட்சி மற்றும் பொது மக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை நேற்றையதினம் முன்னெடுத்திருந்தனர்.

போராட்டக்காரர்கள் புறக்கோட்டையை நோக்கி நகர்ந்தபோது, பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள். எனினும் போராட்டக்காரர்கள் அவர்களின் தடைகளை மீறி நகர முற்பட்டபொது முன்னெச்சிரிக்கைசெய்த பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தினார்கள்

இதனால் பதற்ற நிலைமைகள் உருவாகியதைஅடுத்து,கூட்டத்தை கலைக்கநீர்த்தாரை ☞ 2

## வங்குரோத்திலிருந்து நாட்டை மீட்கும் வேலைத் திட்டம் இறுதிக் கட்டத்தில்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்காக ஆளும்தரப்பு முன்னெடுக்கும் வேலைத் திட்டம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இது கடுமையான பணி என்ற போதிலும், மிகக் குறுகிய காலத்தில் அவற்றை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளோம் என்று ஜனாதிபதி, ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கேகாலை மங்கெதர டெம்பிடிபுராதனபிரிவெனா விகாரையில் புதிதாக அமைக்கப்பட்ட தங்க வேலியை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டம் குறித்து கலந்துரையாடி விரைவில் அந்த பணிகளை நிறைவுசெய்ய எதிர்பார்க்கிறோம். 2022 ஆண்டில் இலங்கை வங்குரோத்து நாடாக அறிவிக்கப்பட்டது. அதனையடுத்து, சர்வதேச நிதி நிறுவனங்களும், வங்கிகளும் இலங்கைக்கு கடன் வழங்குவதை நிறுத்தின. அதனால் ☞ 2

## பாடசாலை மாணவருக்கு விசேட ஊடகக் கல்வி

ஊடகங்களின் அனுபவத்தையும் நடைமுறை அறிவையும் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் நோக்கில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு 'Kaledoscope 2024 Screen media for Gen-Z' என்ற கற்கைநெறியை ஆரம்பித்துள்ளது. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் இந்த கற்கை நெறி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதிசெயலகம், கல்வி அமைச்சு, ஜனாதிபதி ஊடகப் பிரிவு, அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்கள், கல்விமான்கள், ☞ 2

## 3 லட்சம் பேரை வலுவூட்ட ஆளும் தரப்பு நடவடிக்கை

அஸ்வெசும திட்டத்தின் கீழ் 3 லட்சம் பேரை வலுவூட்டுவதற்கு ஆளும் தரப்பு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

'ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 'அஸ்வெசும வேலைத்திட்டத் ☞ 2

## பவிதரன் கொலை சந்தேகநபர்களில் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பவிதரன் கடத்திக் கொலை செய் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரான ஐந்தாவது சந்தேகநபரை மனைவி அடையாளம் காட்டியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும் பொலிஸார் இதுவரையில் 6 பேரை கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ளவர்கள் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நேற்று அடையாள அணிவகுப்பு நடைபெற்ற வேளை, கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ☞ 2

## நிறைவேற்றுத்துறையின் தேவைக்காக அன்றி சபை மரபுகளை காப்பதே சபாநாயகர் கடமை

### சுட்டிக்காட்டினார் ரவூப் ஹக்கீம்

நிறைவேற்றுத்துறையின் தேவைக்காக செயற்படாமல் சபையின் மரபுகளை பாதுகாப்பதே சபாநாயகரின் கடமை. ஆனால் சபாநாயகர் அதனை செய்ய தவறி இருக்கிறார். அதனாலே சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவர தீர்மானித்தோம் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாது தினமாக இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

இந்த நாடாளுமன்ற காலத்தில் பல்வேறு விடயங்களை எங்களுக்கு காணக் கூடியதாக இருந்தன. தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி பதவி விலகினார். அதன் பின்னர் அமைச்சரவை பதவிவிலகியது. அதனைத் தொடர்ந்து பதில் ☞ 8

### பெரும்பான்மையைக் கொண்டு

## தவறுகளை மூடி மறைத்தால் மக்கள் வன்முறையில் குதிப்பர்

### உதய கம்பன்பில எச்சரிக்கை

பெரும்பான்மை எப்போதும் வெற்றிப் பெறாது. பெரும்பான்மை பலத்தை கொண்டு தவறுகளை தொடர்ந்து மூடி மறைத்தால் மக்கள் வன்முறையை கையில் எடுப்பார்கள். ஆகவே ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் தரப்பினர் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையின் இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சிரேஷ்ட அரசியல்வாதி என்ற நன்மதிப்பை பெற்றிருந்தார். 2020 ஆம் ஆண்டு ☞ 2

## அதிக வெப்பத்தால் தென்னைகளில் வெள்ளை ஈ தாக்கமும் அதிகரிப்பு



அதிகரித்து வரும் வெப்பநிலையினால் தென்னைப்பயிரில் வெள்ளை ஈயின் தாக்கம் அதிகரித்துள்ளது என தென்னை பயிர்செய்கை சபையின் முகாமையாளர் வைகுந்தன் தெரிவித்தார்.

வெள்ளை ஈயின் தாக்கத்தை கட்டுப்படுத்துவது தொடர்பில் தென்னை பயிர்செய்கை சபையின் முகாமையாளர் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:

அதிகரித்துவரும் வெப்பநிலையினால் தென்னை பயிரில் காணப்படும் ஓலைகளில் வெள்ளை ஈயின் தாக்கம் வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் அதிகரித்துள்ளது இதனை ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

# கடலில் குளிக்கச் சென்ற இருவர் சடலங்களாக மீட்பு

## சேந்தாங்குளத்தில் சோகம்





யாழ்ப்பாணம் - இளவாலை சேந்தாங்குளம் கடற்கரையில் குளிக்க சென்ற இருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். சேந்தாங்குளம் கடலில் நேற்ற நீராட சென்ற மூவரில் இருவர் காணாமல் போன நிலையில் இருவரும் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நாவற்குழியைச் சேர்ந்த சிவநேசன் திவ்யன் என்ற 21 வயதானவரும்

செட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த தேவன்கருணதாசா யூட் என்ற 36 வயதான நபருமே உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதியொன்றின் உரிமையாளர் மற்றும் பணியாளர்கள் இருவர் என மூவர் கடலில் நீராடிய நிலையில் இருவர் அலையடித்து காணாமல் போயிருந்தனர். அவர்களே பின்னர் சடலமாக மீட்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பாக இளவாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இனி இது .....

கூட்டம் பத்தரமுல்லவில் உள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு அமைச்சர்களான அலி சப்ரி மற்றும் காஞ்சன விஜயசேகர ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். கோட்டாபய ஜனாதிபதித் பதவியிருந்த-விரட்டப்பட்டதிலிருந்து கட்சிப் பக்கம் தலைவைத்தும் படுக்காதிருந்தவர்கள் இவர்கள் இருவரும். அதிலும் காஞ்சன ரணிலின் தீவிர விசுவாசியாகவே மாறிவிட்டாரோ என்று அஞ்சும் அளவிற்கு தீவிரமாக வேலை செய்து வந்தவர்.

அவர்கள் இருவரும் கூட்டத்திற்கு வந்திருந்தது மற்றையவர்களுக்கே ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது. நாடளா-மன்ற உறுப்பினர்கள் நிமல் லன்ஸா மற்றும் லக்ஸ்மன் பிரியதர்சன யாப்பா ஆகியோர் உருவாக்கிய ரணிலுக்கு ஆதரவான புதிய அரசியல் கூட்டணியில் இவர்கள் எல்லோரும் முக்கிய பங்காற்றி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டவர்கள். அப்படிப்பட்டவர்களே பஸிலைக் கண்டதும் கட்சிக்குத் திரும்பி விட்டதும் பெரமுனவினர் உற்சாகமடைந்திருக்கிறார்கள்.

நாடு திரும்பியதும் பஸில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இது தமது கட்சியின் ஆட்சிதானா என்பதில் சந்தேகமாகவே இருக்கின்றது என்று தெரிவித்திருந்தார். அதற்குக் காரணமாக ஆளும் தரப்பில் உள்ள அமைச்சர்கள் பலரும் கட்சி அலுவலகப் பக்கமே வருவதில்லை என்று குத்தல் கதை ஒன்றும் சொல்லியிருந்தார். அதைத் தொடர்ந்தே அமைச்சர்கள் அலி சப்ரியும் காஞ்சனவும் நேற்றைய கூட்டத்திற்கு வருகை தந்திருந்தார்கள்.

நேற்றைய கூட்டத்தில் கட்சி மறுசீரமைப்புத் தொடர்பில் அதிகம் ஆராயப்பட்டுள்ளது. எந்தத் தேர்தல் வந்தாலும் அதை எதிர்கொள்ளத் தயாராகும் வகையில் கட்சியைத் தயார்ப்படுத்த கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டது.

பொதுத் தேர்தலா ஜனாதிபதித் தேர்தலா என்பதை ரணில் முடிவு செய்துகொள்ளட்டும் எது வந்தாலும் அதை எதிர்கொள்ளத் தாயராக இருக்கவேண்டும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலில் பொதுத் தேர்தலை வைக்கும்படி பஸில் ஜனாதிபதியைச் சந்தித்துக் கேட்ட நிலையில், இனி வரும் நாள்கள் ரணிலுக்கும் தலையிடியாகத்தான் இருக்கப்போகின்றன.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கோப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அந்தக் குழுவிலிருந்து உறுப்பினர்கள் தமது உறுப்பினர் பதவியிலிருந்து விலகி வருகின்றனர்

மேற்படி குழுவிலிருந்து கடந்த திங்கட்கிழமை ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன பதவி வில கியதையடுத்து நேற்றுமுன்தினம் எதிர்த்தரப்பு சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, சரித்த ஹேரத், ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த ஹேஷா விதானகே, , எஸ்.எம்.மரிக்கார் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் சாணக்கியன் ஆகியோரும் பதவி விலகினர்.

தமது பதவி விலகல் தொடர்பில் நேற்று தயாசிறி ஜயசேகர, ஹேஷா விதானகே, சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோர் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து விளக்கமளித்தனர்.

அத்துடன் வசந்தயாப்பா பண்டார மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் தங்களது பதவி விலகல் தொடர்பில் நேற்று சபைக்கு அறிவித்தனர். அதேநேரம் துமிந்த திஸாநாயக்க தனது பதவி விலகலை தொலை நகல் மூலம் அறிவித்துள்ளார்.

## தவறுகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுத்தேர்தலை தொடர்ந்து சபாநாயகர் பதவிக்கான தெரிவு இடம்பெற்ற போது எதிர்க்கட்சியினர் சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தனவை நியமிக்க ஆதரவு வழங்கினார்கள். எதிர்க்கட்சியினர் வைத்த நம்பிக்கையை அவர் பாதுகாக்கவில்லை. இதனால்தான் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்துள்ளார்கள்.

நம்பிக்கையில்லா பிரேரணையின்போது ஆளும் தரப்பினர் 'சபாநாயகர் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை மீறவில்லை, சபாநாயகர் சரி என்பதால்தான் உயர் நீதிமன்றம் எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நிராகரித்துள்ளது, இல்லாத பிரச்சினையை தோற்றுவிப்பதற்காகவே நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. எம்மிடம் பெரும்பான்மை உள்ளது. ஆகவே நாங்கள் சபாநாயகரை பாதுகாப்போம்' என்று தன்னிச்சையாக குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது.

நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பில் உயர் நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்கள் குழுநிலை வேளையின் போது சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. தவறுகளை எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் சபாநாயகரிடம் சுட்டிக் காட்டினோம். ஆனால் அவர் அதனை பொருட்படுத்தவில்லை. இதன் பெறுபேறே இன்று நம்பிக்கையில்லா பிரேரணையாக வெளியாகியுள்ளது.

நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தை உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாது என்பதால் தான் எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் இரத்து செய்தது. உலக நாடுகளில் சட்டம் ஒன்று இயற்றப்பட்டதன் பின்னர் அதன் அரசமைப்பு இயங்குநிலை தொடர்பில் ஆராய நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு. ஆனால் இலங்கையில் அந்த நிலைமை கிடையாது.

சபாநாயகர் பதவி வகிப்பவர் அரசியலுக்கு அப்பாற்பட்டு சுயாதீனமான முறையில் அரசமைப்புக்கு அமைய செயற்படுவார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அரசமைப்பின் 80 ஆவது உறுப்புரை நீக்கப்பட்டு அந்த அதிகாரம் சபாநாயகருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையை மாத்திரமல்ல, அரசமைப்பின் நம்பிக்கையையும் இல்லாதொழித்துள்ளார்.

பெரும்பான்மை எம்மிடம் உள்ளது என்று ஆளும் தரப்பு தன்னிச்சையாக செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவையும் இந்த ஆளும் தரப்பு பாதுகாத்தது. கெஹெலியவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது நாடாளுமன்றத்தில் பல விடயங்கள் பேசப்பட்டன மக்கள் அதனை உன்னிப்பாக ஆராய்ந்தார்கள்.

இலங்கை அரசியல் வரலாற்றில் முதன்முறையாக அமைச்சரவை அமைச்சர் ஒருவரை கைது செய்ய பொலிஸாருக்கு தைரியம் வந்துள்ளது. நீதிமன்றம் சுயாதீனமாக செயற்பட்டு இன்று கெஹெலிய ரம்புக்வெல்லவை சிறையில் அடைத்துள்ளது. ஆகவே பெரும்பான்மை எப்போதும் வெற்றிப் பெறாது. பெரும்பான்மை பலத்தை கொண்டு தவறுகளை தொடர்ந்து மூடி மறைத்தால் மக்கள் வன்முறையை கையில் எடுப்பார்கள். ஆகவே ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் தரப்பினர் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்றார்.

## 2 பிக்குகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கண்ணீர்புகை குண்டுகளை வீசினர்.

இதனால் அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது. அதேநேரம், அத்துமீறியவர்கள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகத்தினை மேற்கொண்டு அவர்களை பலவந்தமாக கைது செய்திருந்தனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பவிதரன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

6 சந்தேகநபர்களும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அதன்போது, படுகொலையான இளைஞனின் மனைவி மன்றில் தோன்றி, ஐந்தாவது சந்தேகநபரை அடையாளம் காட்டினார்.

அதனை தொடர்ந்து வழக்கினை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதவான் , அன்றைய தினம் வரையில் ஆறு சந்தேக நபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்திரவிட்டார்.

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகத்துறையிலுள்ள நிபுணர்கள் ஆகியோரைக் கொண்ட ஆலோசனைக் குழுவின் ஒத்துழைப்புடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஊடகப் பிரிவுகள் செயற்பாட்டில் உள்ள 31 பாடசாலைகளில் இருந்து 158 மாணவர்கள் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு வாரத்திற்கு ஒரு நாள் என்ற அடிப்படையில், 16 வாரங்கள் இந்த கற்கை நெறி முன்னெடுக்கப்படவுள்ளது.

யுனிலீவர் லங்கா நிறுவனம், சிலிட் (SLIT) கல்வி நிறுவனம் மற்றும் லங்கா ஜஓசி நிறுவனம் ஆகியன இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு அனுசரணை வழங்குகின்றன.

நிகழ்ச்சித்திட்டத்தின் முதற்கட்டமாக பாடசாலை மாணவர்களுக்கு ஊடகப் பின்னணி தொடர்பில் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சுதீர நிலங்க விதான, ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர்களான பொறியியல் நிபுணர் ஸ்டான்லி ஹெட்டியாராச்சி மற்றும் நதீரா மடுகல்ல ஆகியோர் விளக்கமளித்தனர்.

மூத்த ஊடகவியலாளர் உதம் சதரசிங்க, மூத்த கலைஞர் சுதத் தேவப்பிரிய, தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் ஊடகப் பிரிவின் தலைவர் பந்துல பி. தயாரத்ன ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

இந்த கற்கைநெறியின் இரண்டாம் கட்டமாக, திறமையை வெளிக்காட்டும் மாணவர்களுக்கு 5 பிரிவுகளில் 6 நாட்கள் மேலதிக அறிவூட்டல்கள் வழங்கப்படவுள்ளது. நிபுணத்துவம் வாய்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள் இந்த பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

இலங்கையிலுள்ள அனைத்து இலத்திரனியல் ஊடக நிறுவனங்களும் இந்த வேலைத்திட்டத்துடன் கைகோர்த்துள்ளதுடன், நிகழ்ச்சியில் பங்குபற்றும் மாணவர்கள், முன்னணி ஊடக நிறுவனங்களுக்குச் சென்று, இரண்டு நாள் நடைமுறை அறிவைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படவுள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு அவர்களின் வர்த்தக நாமம் மற்றும் சந்தைப்படுத்தல் பற்றிய புரிதல் இருக்க வேண்டும் என்பதால், தனியார் துறையில் அதிக அனுபவமுள்ள நிறுவனங்களில் அந்த அனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த கற்கைநெறி மாணவர்களுக்கு எதிர்கால உலகிற்குப் உகந்த வகையில் புதுமையுடன் கூடிய நடைமுறை அறிவை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 3 லட்சம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரிசுமூர்த்தி திட்டத்தைவிடவும் மூன்று மடங்கு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி சமூர்த்திக்காக 60 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், அஸ்வெசும திட்டத்திற்காக 180 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த பொருளாதார நெருக்கடியினால் பெருமளவில் கஷ்டங்களை எதிர்கொண்ட மக்களுக்கான நிவாரணமாகவே அதனை வழங்குகிறோம்.-

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டவர்களை வலுவூட்டும் நோக்கில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் திறைசேரி என்பன இணைந்து மேலதிக நிதி ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளன.

அதன் கீழ், அனைத்து கிராம சேவகர் பிரிவுகளையும் உள்வாங்கி, கிராம சேவகர் பிரிவொன்றுக்கு 07 பேர் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு, நைட்டா மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை என்பன இணைந்து வேலைத்திட்டம் ஒன்றையும் செயற்படுத்தவுள்ளன. அங்கு பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்வோருக்கு அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பயிற்சி சான்றிதழ் வழங்கப்படும்.

அஸ்வெசும பயனாளிகள் 14,000 பேரை வலுவூட்டுவதற்கான விசேட வேலைத்திட்டத்தை சிறுதோட்ட அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து செயற்படுத்த எதிர்பார்க்கப்படுவதோடு, 2000 ஹெக்டயாரில் தேயிலை நடுகைச் செய்யவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் மீன்பிடித் தொழிலுக்கு விசேட கடன் நிவாரணம் வழங்கும் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ், கடற்றொழில் அமைச்சு, சமூக வலுவூட்டல் அமைப்புக்கள் மற்றும் சமுர்த்தி வங்கியுடன் இணைந்து உவர்-நீர் மீனவக் குடும்பங்களை வலுவூட்டுவதற்கான சலுகைக் கடன்களை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் கடல் அட்டை உற்பத்திக்காக 400 குடும்பங்களுக்கு சலுகைக் கடன் வழங்கப்படவுள்ளது. மீன்பிடி படகுகள் உள்ளிட்ட மீன்பிடித் தொழில்துறைக்கு அவசியமான உபகரணங்களை வழங்குவதே இத்திட்டதின் பிரதான நோக்கமாகும்.

பனை, கித்துல், தென்னை போன்ற உற்பத்திகளுக்கு தரப்படுத்தப்பட்ட 'கள்ளு அனுமதி' வழங்குவதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகிறது. செயற்கை உற்பத்திகளுக்கு மாறாக, இயற்கை மதுபான உற்பத்தியை மேற்கொண்டு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கால்நடை அபிவிருத்தி அமைச்சின் ஊடாக களுத்துறை மற்றும் குருநாகல் மாவட்டங்களை மையமாகக் கொண்டு 10,000 நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்டத்தை ஆரம்பிக்கவும் எதிர்பார்க்கிறோம். உற்பத்தி பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலேயே இந்த திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

சீனாவின் சோங்சிங் பிராந்தியத்தில் உள்ள 33 தொழில் பயிற்சி நிறுவனங்களுடன் பல ஒப்பந்தங்களில் கைசாத்திடவும் அமைச்சு தீர்மானித்துள்ளது. அதனூடாக ஒரு இலட்சம் தொழில் முனைவோருக்கான பயிற்சிகள் வழங்கப்படவிருப்பதாகவும், இத்திட்டங்களின் மூலம் 03 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களை வலுவூட்ட எதிர்பார்த்திருக்கிறோம்.' என்றார்.

## வங்குரோத்திலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலில் அந்த தடையை நீக்கிக்கொள்ள, நாம் கடனை மீளச் செலுத்தும் வல்லமையுள்ள நாடு என்பதை உறுதி செய்ய வேண்டும்.

பொருளாதார நெருக்கடியிருந்து நாட்டை மீட்பதற்காக ஒரு வருடத்திற்குள் தீர்மானமிக்க பணிகளை ஆற்றியுள்ளோம். இதே நிலை தொடரும் பட்சத்தில் இன்னும் இரண்டு, மூன்று வருடங்களில் நாட்டின் கஷ்டங்களைத் தீர்த்துக் கொள்ளலாம். வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்காக ஆளும் தரப்பு முன்னெடுக்கும் வேலைத்திட்டம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இது கடுமையான பணி என்ற போதிலும், மிகக் குறுகிய காலத்தில் அவற்றை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளோம்.

அதற்குரிய பேச்சுக்களை இந்த வாரத்திற்குள் முழுமையாக நிறைவு செய்ய எதிர்பார்க்கிறோம். அதன் பின்னர் இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் பேச்சுக்களை முன்னெடுக்கவுள்ளோம். அதன் பின்னர் கடன் வழங்கிய நாடுகளுடன் இணைந்து பிரான்ஸ், ஜப்பான், இந்தியா ஆகியவற்றின் பங்கேற்புடன் பேச்சுக்களை முன்னெடுப்போம்.

அதேபோல் இலங்கை சார்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சில் ஈடுபட்ட பணிக்குழு, சர்வதேச நாணய நிதிய பணிக்குழுவுடன் அதிகாரிகள் மட்ட இணக்கப்பாட்டிற்கு வரவுள்ளது. அதேபோல் சீனாவுடனும் பேச்சுக்களை முன்னெடுப்போம். மேலும் தனியார் கடன் வழங்குனர்களுடனும் பேச்சுக்களை முன்னெடுத்து வருகிறோம். நிதி அமைச்சின் செயலாளரும் மத்திய வங்கி ஆளுநரும் மீண்டும் ஐரோப்பாவிற்குச் சென்று மேற்படி குழுவினருடன் கலந்துரையாடவுள்ளனர்.

அதன்படி வங்குரோத்து நிலையிலிருந்து நாடு விடுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட பின்னர், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைப் பேச்சுக்களை ஏப்ரல் மாதமளவில் முன்னெடுக்கவுள்ளோம். அதன் பின்னர் அதிகாரிகள் மட்ட ஒப்பந்தத்தில் விரைவில் கைசாத்திட எதிர்பார்க்கிறோம்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் ஜூன், ஜூலை மாதங்களுக்குள் நிறைவடையும். எதிர்காலத்தில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் நடைபெறவுள்ளதால் அதற்கு முன்னதாகவே இந்த செயற்பாடுகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கிறோம். அதன் பின்னர் உலக அரங்கில் கடனை மீளச் செலுத்தக்கூடிய நாடு என்ற உறுதியைப் பெற்றுக்கொள்வோம். இதுவரை காலமும் தடைப்பட்டிருந்த நிதி உதவிகள் நாட்டிற்கு கிடைக்க ஆரம்பித்த பின்னர் நாட்டின் டொலர் கையிருப்பு அதிகரிக்கும்.

தற்போதும், பல்வேறு வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் எம்முடன் வணிகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதைத் தவிர்த்து வருகின்றன. மேற்கூறிய செயற்பாடுகளை நிறைவு செய்யும் பட்சத்தில் அவர்களின் ஒத்துழைப்பு மீளக் கிடைக்கும். அதனால் எமது நாணயக் கையிருப்பும் அதிகரிக்கும்.

நாம் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தை கடந்து வந்த போது அதிலிருந்து மீள்வதற்கு கடினமான பல தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. ஆனால்

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# 10 இலட்சம் இளைய தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் திட்டத்தை தொடங்கும் ஆளும் தரப்பு

உரித்து வேலைத்திட்டத்தின் கீழ் முழுமையான உரிமையுடன்கூடிய விடுவிப்பு கையளிப்புப் பத்திரத்தை வழங்குவதற்கு குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் ஒரு மில்லியன் இளைய தொழில்முயற்சியாளர்களைஉருவாக்குவதற்கு இவ்வேலைத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் இளைய தொழில்முயற்சியாளர்கள் பற்றிய தகவல்கள்களைத் திரட்டுவதற்குரிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது இரண்டு மில்லியன் குடும்பங்களுக்கு அவர்கள் அனுபவிக்கின்ற காணிகளுக்காக கையளிப்புப் பத்திரங்கள் அல்லது வழங்கல் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. உரித்து வேலைத்திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டில் குறித்த வழங்கல் பத்திரதாரர்கள் மற்றும் கையளிப்புப் பத்திரதாரர்களுக்கு அரச காணிகளில் அறுதி உரித்தை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் நாடளாவிய ரீதியில் ஒரு மில்லியன்இளம்தொழில்முயற்சியாளர்களை உருவாக்கும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவும்திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த இரண்டு வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தகவல்களை 14,022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் படையணியை ஈடுபடுத்தி அந்தந்த கிராம அலுவர்களின் ஒத்துழைப்புடன் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கிணங்க, பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் காணப்படுகின்ற பொறிமுறையைப் பயன்படுத்தி தேவையான தகவல்களை சேகரித்து ‘உரித்து’ வேலைத்திட்டம் மற்றும் ஒரு மில்லியன் இளம் தொழில்முயற்சியாளர்களைஉருவாக்கும்வேலைத்திட்டத்தைத் துரிதமாகமேற்கொள்வதற்காகசுற்றுலாமற்றும் காணி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(05)

# மருதானை சென் ஜோசப்பை வென்றது யாழ்.சென் பற்றிக்ஸ்

## காற்பந்தாட்டத்தில் 3ஆம் இடம்




யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் கொழும்பு மருதானை சென் ஜோசப் கல்லூரிக்கும் இடையிலான மூன்றாம் இடத்துக்கான காற்பந்தாட்டப்போட்டி சனிக்கிழமை காலைகொழும்புசுகதாஸவிளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இப்போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 05 : 02 என்ற கோல் கணக்கில் மருதானை சென் ஜோசப் கல்லூரியை வெற்றி பெற்று 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஜெருஷன் :3 கோல்களையும் ஷாம் மற்றும் ஸ்மித் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர்.

(05)

# சம்மாந்துறை கோட்டக்கல்வி காரியாலயம் புதுப்பொலிவுடன்





(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்தில் உள்ள சம்மாந்துறை கோட்டக் கல்வி காரியாலயம் புதுப்பொலிவு பெற்று வருகிறது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர்

உமர் மௌலானாவின் வழிகாட்டலில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஏ. நசீர் எடுத்த பெருமுயற்சியின் காரணமாக இக்கோட்டகல்விகாரியாலயம் புதுப் பொலிவு பெற்று சிறப்பாக காட்சியளிக்கின்றது.

அங்கு ஒன்று கூடல் மண்டபம் ஏனைய மண்டபங்கள் மற்றும் கல்விசார் தகவல்கள் மிசன், விஷன் நவீன முறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வலயக்கல்விப் பணிமனையின் புதன்கிழமை கல்விஅபிவிருத்தி கூட்டம் பரீட்சார்த்தமாக நடைபெற்றது.

இது தவிர அந்த முழு கட்டடமேவர்ணப் பூச்சுகளோடும் ஏனைய கல்வி செயற்பாடுகளுக்கு பொருத்தமான காட்சிகளோடும் நவீனம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

கோட்டக் கல்வி பணிப்பாளர் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரி ஏ.நசீர் தன் அபார முயற்சியில் கட்டடம் புதுப் பொலிவு பெற்றதை பலரும் பாராட்டி பேசினார்கள். இதன் திறப்புவிழா விரைவில் நடைபெறும்.

இவ்வாறு சம்மாந்துறை போல நாவிதன்வெளி, இறக்காமம் ஆகியகோட்டங்களும் இவ்வாறான கட்டடங்கள் புதுப் பொலிவு பெற வேண்டும் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா கேட்டுக்கொண்டார்.

இதற்காக ஒத்துழைத்த மாகாண, வலய கல்வித்திணைக்களம் அனைவருக்கும் கோட்டக் கல்வி பணிப்பாளர் ஏ.நசீர் நன்றிகளைத் தெரிவித்தார். (05)

# ஹொரவப்பொத்தான சென்ற பேருந்து விபத்தில் சிக்கியது

## 18 பேர் காயம்



கண்டியிலிருந்து ஹொரவப் பொத்தான நோக்கி பயணித்த இ.போ.ச பேருந்து ஒன்று சுவரில் மோதி விபத்துக்குள்ளானதில் 18 பயணிகள் காயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்த விபத்து தம்புள்ளை நாவுல உடதெனிய பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்த விபத்தின் காரணமாக இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான பல மின் கம்பிகள், தொலைபேசி கம்பிகள் மற்றும் மதில்என்பனசேதமடைந்துள்ளன.

இந்த விபத்து காரணமாக அந்த வீதியின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

(05)

# இரண்டு கோடி ரூபா பெறுமதிலான 2 வலம்புரிச் சங்குடன் ஒருவர் கைது

## மட்டக்களப்பில் சம்பவம்



மட்டக்களப்புநகரில்உள்ளஇந்துஆலயம்ஒன்றில் சட்டவிரோதமாக வலம்புரி சங்குகளை விற்பனை செய்ய முயன்ற பூசகர் ஒருவரை சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான இரண்டு வலம்புரிச் சங்குகளுடன் செவ்வாய்க்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்ததகவல்ஒன்றையடுத்து விசேட அதிரடிப்படைத் தளபதி சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் ஆலோசனைக்கமைய முல் லைத்தீவு விசேட அதிரடிப்படை முகாம் பெறுப்பதிகாரி தலை மையிலான குழுவினர் சம்ப வதினமானசெவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு நகரிலுள்ள குறித்த ஆலய பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது வலம்புரிசங்குகளைவிற்பனைசெய்ய முயன்றபூசகரை மடக்கிபிடித்து கைது செய்ததுடன் சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான 2 வலம்புரிச்சங்குகளைமீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்ட 52 வயதுடைய பூசகரையும் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களையும்தம்மிடம்ஒப்படைத்துள்ளதாகவும், கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# வவுனியா மாவட்ட வைத்தியசாலை மருந்தாளர்கள் பணிப்புறக்கணிப்பு

## நோயாளர்கள் அவதி



வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் மருந்தாளர்கள் பல்வேறு கோரிக்கைளை முன்வைத்து நேற்று (புதன்கிழமை) (சுகயீன விடுமுறை) பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பதவி உயர்வு மற்றும் புதிய நியமனம் ஆகியவற்றில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்து மருந்தாளர்கள் சுகவீன விடுமுறையில் ஈடுபட்டனர்

இலங்கை முழுவதும் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந்நிலையிலேயே வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையிலும் மருந்தக பிரிவுகள் முற்றாக செயழிந்துள்ளன.

இந்தப்பணிப்புறக்கணிப்புபோராட்டம்காரணமாக கிளினிக், வெளிநோயாளர் பிரிவு ஆகியவற்றிக்கு வருகை மேற்கொண்ட நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர். (05 - 100)



காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

### வெப்பத்திலிருந்து காப்போம்

இலங்கையில் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதியில் இருந்து அதிக வெப்பமான வானிலையை எதிர்பார்க்கலாம் என அறிவியலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாடுதற்போதுஎல்–நினோதாக்கத்தினால்பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் கடும் வெப்பம் மற்றும் கட்டற்ற வெள்ளம் என்பவற்றால் பாதிக்கப்படும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

இலங்கை தீவு நாடாக இருந்தபோதும் வெப்பநிலை ஏற்கனவே எக்கச்சக்கமாக எகிறத் தொடங்கிவிட்டது. குருநாகலில் அதிக வெப்பநிலையாக 36.1 பாகை செல்சியஸ் பதிவானது. இரத்தினபுரி மாவட்டத்தில் 35.4 பாகை செல்சியஸாக வெப்பநிலை பதிவாகியிருக்கிறது.

வடமேற்கு, வடமத்திய, கிழக்கு மாகாணங்களிலும், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மொனராகலை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலும் மனித உடலால் உணரப்படும் வெப்பம் கவனத்திற்கொள்ள வேண்டிய மட்டத்தில் காணப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலமையை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக வேண்டும். அதிகரிக்கும் வெப்பத்தால் கடந்த ஆண்டைவிட விரைவாக வறட்சியை எதிர்கொள்ளவேண்டி ஏற்படலாம். பல இடங்களிலும் ஏற்படவுள்ள குடிதண்ணீர் பற்றாக்குறையைச் சமாளிக்க இப்போதே தயாராகவேண்டும். அதுமட்டுமன்றி தண்ணீர் சிக்கனமான நவீன விவசாய முறைகளுக்கு எமது விவசாயிகள் மாறுவதை ஊக்கப்படுத்துவதும் மிக அவசியம். இடர் வந்த பின்னர் அக்கறை செலுத்துவதற்குப் பதிலாக முன்கூட்டியே தயார்ப்படுத்துவதே சிறந்தது.

அதேபோன்று ஒவ்வொரு தனிமனிதர்களும் இந்த வெப்பக் காலநிலையைப் பாதுகாப்பாகக் கடந்து செல்வதற்குரிய வழிவகைகளையும் காணவேண்டும். வெயிலின் ஆதிக்கம் அதிகரிக்கும்போது உடலின் வெப்பம் சிலருக்கு 106 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு மேல் தாண்டிவிடும். அப்போது உடல் தளர்ச்சி அடையும். களைப்பு உண்டாகும். நிறைய வியர்க்கும். தண்ணீர்த் தாகம் அதிகமாக இருக்கும். தலைவலி, வாந்தி, தலைச்சுற்றல், மயக்கம் ஆகிய அறிகுறிகள் தோன்றும். அளவுக்கு மீறிய வெப்பத்தின் காரணமாக உடலின் உப்புக்கள் வெளியேறிவிடுவதால், இந்தத் தளர்ச்சி ஏற்படுகிறது. இதற்கு 'வெப்பத் தளர்ச்சி' (**Heat Exhaustion**) என்று பெயர்.

நீண்ட நேரம் வெயிலில் நிற்பவர்கள், வேலை செய்பவர்கள், வீதியில் நடந்து செல்பவர்கள் திடீரென மயக்கம் அடைவதை அறிவீர்கள். இது 'வெப்ப மயக்க'த்தின் (**Heat Syncope**) விளைவு. 'சன் ஸ்ட்ரோக்' என்று அழைப்பது இதைத்தான். வெயிலின் உக்கிரத்தினால் தோலிலுள்ள குருதிக் குழாய்கள் அதீதமாக விரிவடைந்து இடுப்புக்குக் கீழ் குருதி தேங்குவதற்கு வழிசெய்துவிடுகிறது; இதனால், இதயத்துக்குக் குருதி வருவது குறைந்துவிடுகிறது. குருதி அழுத்தம் கீழிறங்குகிறது. மூளைக்குப் போதுமான குருதி கிடைப்பதில்லை. உடனே, தலைச்சுற்றல், மயக்கம் உண்டாகிறது. சிலருக்கு இறப்பு ஏற்படுகிறது.

கோடை வெயிலில் வெளிப்படுகின்ற புற ஊதாக் கதிர்களால் ஏற்படுகிற உடல் பாதிப்புகள் அதிகம். இக்கதிர்களில் 'ஏ', 'பி' என்று இரு வகை உண்டு. 'ஏ'வகைக் கதிர்கள் இளங்காலையிலும் மாலைப்பொழுதிலும் வெளிப்படும். இவை எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. மாறாக, காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை தாக்கும் வெயிலில் 'பி'வகைக் கதிர்கள் வெளிப்படும். இவை 'சன் ஸ்ட்ரோக்' முதல் சருமப் புற்றுநோய் வரை உடலில் பலவித பாதிப்புகளை ஏற்படுத்தலாம். முக்கியமாக, சருமத்துக்குப் போதிய பாதுகாப்பு இல்லாமல் வெயிலில் அதிக நேரம் அலைகிறவர்களுக்குச் சருமம் கறுப்பாகிவிடுவதைக் கவனித்திருப்பீர்கள். இதற்குக் காரணம், சூரியக் கதிர்கள் அதிக வெப்பத்துடன் நேரடியாக சருமத்தைத் தாக்கும்போது, அதிலுள்ள 'பி'வகை புற ஊதாக் கதிர்கள் சருமத்தின் செல்களில் உள்ள டி.என்.ஏ.க்களை அழிக்கின்றன. அந்த அழிவை ஈடுகட்டுவதற்காகச் சருமத்துக்குக் கறுப்பு நிறம் தருகின்ற மெலனின் நிறமிகள் அதிக அளவில் உற்பத்தியாகின்றன. இதன் விளைவால், சருமம் கறுத்துவிடுகிறது.


பலருக்கு சூரிய ஒளியே ஒவ்வாமையை உண்டாக்கும். வெயில் பட்டாலே உடலெங்கும் அரிக்கத் தொடங்கிவிடும். சருமம் சிவந்து வட்ட வட்டமாகத் தடிப்புகள் தோன்றும். அவற்றில் நீர் கோத்துக்கொள்ளும். இதைத் தொடர்ந்து சருமம் உரியும். இதற்கு 'சூரியஒளி நச்சு அரிப்பு' (**Solar Urticaria**) என்று பெயர். இவை தவிர, கோடையில் பொதுவாகத் தாக்கும் நோய்கள் வியர்க்குரு, வேனல் கட்டி, தேமல் தொற்று, அக்கி, அம்மை, வாந்தி, வயிற்றுப்போக்கு, நீர்க்கடுப்பு எனப் பட்டியல் நீளும். எனவே இவற்றில் இருந்த எம்மைக் காத்துக்கொள்ளவேணடும்.

கோடைக் காலத்தில் தொடர்ந்து 2 மணி நேரத்துக்கு மேல் வெயிலில் இருப்பதைத் தவிர்ப்பது, பகல் 11 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வெளியில் செல்லாமல் இருப்பது, பகலில் வெளியில் செல்ல வேண்டியது அவசியம் ஏற்பட்டால், தலைக்குத் தொப்பி போட்டுக்கொள்ளவது அல்லது குடை பிடிப்பது, கண்களுக்குச் சூரியக் கண்ணாடி அணிந்துகொள்வது, சருமத்தில் 'சன் ஸ்கிரீன் லோஷ'னைப் பூசிக்கொள்வது, காற்றோட்டமான பருத்தி ஆடைகளை தளர்வாக அணிவது என்று ஒவ்வொருவரும் முன்னோடி நடவடிக்கைகளை எடுத்து எம்மைப் பாதுகாத்துக்கொள்வோம்.

# யாழ்மண்ணின் யோக புருஷர் யோக சுவாமிகள் !

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ் மொழிக்கல்வி இயக்குநர்**
**மெல்பேண் .... ஆஸ்திரேலியா**

சித் என்றால் அறிவு , ஞானம் , தெள்ளிய பார்வை



,கூர் நோக்கு, விரிந்த நோக்கு என்று பொருள் சொல் லப்படுவதால் – சித்தர்களை அறிவாளிகள் , ஞானிகள், தெளிந்த பார்வையினை உடையவர்கள் , கூர்ந்த நோக்கினை உடையவர்கள்,கடந்து சிந்திப்பவர்கள் என்றும் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா !

சித்தர்கள் என்பவர்கள் மானிடம் செழித்திட வாழ்ந்த மகா ஞானிகள் எனலாம். ' அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு ' என்னும் தத்துவமே அவர்களது இறுக்கமான தத்துவமாய் இலங்கியது எனலாம். எதையும் விரும்பார். எதையும் தமக்காக்கிட எண்ணார். மற்றவர் நலனுக்காய் அவர்கள் எப்பொழுதும் கைகொ டுத்திடவே எண்ணுவார்கள். அதன் வழியில் பயணப்படுவார்கள்.

' மக்கள் சேவையினை மகேசன் சேவையாய் ' எண்ணி இப்பூவுலகில் வாழ்ந்தவர் – பல சித்தர்கள் இருக் கிறார்கள், அப்படியான சித்தருக்கென்று ஒரு பரம்பரையே இருக்கிறது என்பதை வரலாற்றால் அறிகி றோம்.

பாரத நாட்டில் திருமூலருடன் சித்தர் பரம்பரையினை இணைத்துக் கூறுவது வழக்கம். திருமூலர் மூவாயிரம் வருடங்கள் இம்மண்ணுலகில் வாழ்ந்து பல அரிய , பெரிய, பணிகளையெல்லாம் ஆற்றினார் என்று அறிகிறோம். அவரின் பேராற்றல் வியந்து பார்க்கக் கூடியதாகும். அவரின் திருமந்திரம் என்னும் திவ்விய நூல் பலவித கருத்துக்களின் பொக்கிஷமாய் மிளிர்கிறது எனலாம். திருமூலரைத் தொடர்ந்து பலசித்தர்கள் பாரத மண்ணில் வந்தார்கள். அவர்களில் சிலர் ஈழத்திலும் கால்பதித்து சமூக நலனுக்காய் பலவற் றைச் செய்தார்கள் என்றும் அறிய முடிகிறது.

ஈழத்துச் சித்தர்கள் என்றும் சொல்லும் பொழுது மற்றய சித்தர்களை விட மாறு பட்டவராய் , வேறு பட்டவராய் ஒருவர் யாழ்ப்பாண மண்ணிலே பிறந்து, எல்லா இடமும் திரிந்து,யாவருக்கும் சுமைதாங்கியாய், ஆன்மீக வெளிச்சமாய் விளங்கியிருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுவது சாலவும் பொருந்தும் என எண்ணுகின்றேன். ஆடையில் ஆடம்பரம் இல்லை. தனிப்பட்ட எந்த அலங்காரங்களும் இல்லை. எளிமை யான் வாழ்வு. பரிவாரங்கள் இல்லை.பவனி இல்லை. யாரும் சந்திக்கலாம். ஏற்றத்தாழ்வுகள் பார்ப்பதும் இல்லை. நாடியவர்களின் நலன் காக்கும் நன்மருந்து.

நல்லூரில் தேரடியில் ஞானம் பெற்று , கொழும்புத் துறையில் குடிசையில் அமர்ந்து அருளாட்சி புரிந்து இறையடியைச் சரண் புகுந்த யோகர் சுவாமிகள்தான் அப்பெரும் சித்தராவார்.

மாவிட்டபுரத்தில் சைவக்குடும்பத்தில் பிறந்து ' சதாசிவன் ' என்னும் பெயர் பெற்று , கத்தோலிக்க பள் ளியில் ' யோன் ' என்று பெயர் மாற்றப்பட்டு நிறைவில் யோகநாதனாகிப் பின் ' யோகர் சுவாமி ' என் னும் சித்தராய் மலர்கிறார் இந்த மகான். தாயார் சிறுவயதில் இறக்கிறார். தந்தையார் மலை நாட்டில் வேலை செய்கிறார். மகனை எப்படியாவது படிக்க வைக்கத் தந்தை விரும்புகிறார்.

தந்தையின் உடன் பிறந்த சகோதரன் சின்னையாவோ கொழும்புத்துறையில் கத்தோலிக்கப் பெண்ணை மணம் முடித்து அம்மதத்துள் நிற்கின்றார். அந்தச் சூழலில் சதாசிவன் – யோனாகி கல்வி கற்கும் சூழ் நிலை ஏபட்டதைக் கண்டதும் ; தந்தையுடன் பிறந்த சகோதரி முத்துப்பிள்ளை என்பவர் மருமகனை மீட்டு சைவத்துள் கொண்டுவர முயலுகின்றார். சமணத்துக்குச் சென்ற தம்பியை மீட்ட திலவதியார் போல – மரு மகனைச் சைவத்துக்குள் இழுத்திட மாமியார் முன்வந்து நின்றார் எனலாம். மருமகனை மாற்று மதம் தீண்டா வண்ணம் சைவப் பற்றினை ஊட்டுவதற்காக மாமியார் முத்துப்பிள்ளை கையாண்ட வழிகள் நல்ல வெளிச்சமாய் அமைந்தது எனலாம். மாமியாயின் நெறிப்படுத்தலினால் – யாழ் மண்ணுக்கு நல்ல தொரு சித்தர் கிடைக்கப் பெற்றார் என்பதும் பொருந்தும் அல்லவா !

கந்தப்பெருமான் அருள்புரியும் மாவிட்டபுரத்தில் பிறந்தவர் கந்தப் பெருமான் அருள் புரியும் நல்லூரில் ஞானம் பெற்றார் என்பது திருவ ருள் அல்லால் வேறு எப்படி என்று எடுக்க முடியும் !

எல்லோரையும் போலவே சாதரணமாகவே பிறந்தார். சாதாரண மாகவே வளர்ந்தார். சாதாரணமாகவே படித்தார். அதன் பின் அரச உத்தியோகமும் பார்த்தார். அவரின் பிறப்பில்கூட எந்த அதிசயமும் நிகழ வில்லை என்பதும் நோக்கத்தக்கத்தது. ஆனால் பெரும் மகானாக , பெரும் சித்தராக அவர் வளர்ந்து நின்றார் என்பதற்கு இறையருளை த்தான் காரணம் எனச் சொல்லக் கூடியதாக இருக்கிறது .

' பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு '

என்ற வள்ளுவத்தின் கருவே யாழ் மண்ணின் சித்தரிடம் நிறைந்து காணப்பட்டது எனலாம்.

' மற்றவர்கள் துயிலும் பொழுது ஞானி விழித் திருப்பான் ' என்று கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. அது முற்றிலும் எங்கள் யாழ் மண்ணின் ஆன்மீக ஜோதி யோகர் சுவாமிகளுக்கு மிகவும் பொருத்தமாய் அமை ந்தது எனலாம். கிளிநொச்சியில் சுவாமிகள் நீர்ப்பாசனப் பகுதியில் கடமையாற்றும் வேளை –வேலை முடி ந்து மற்றவர்கள் நித்திரைக்குச் சென்றுவிடுவர். சுவாமியோ அவ்வேளை நித்திரையை விட்டு விட்டு நெடு நேரம் ' தியானத்தில் ' இருந்திருக்கிறார் என்பதை அறிய முடிகிறது. சுவாமிகள் இப்படி இரவில் நடந்து கொள்ளுவதை – அங்கு சென்று வரும் அவரின் மாமியாரின் மகனாகிய வயித்தியலிங்கம் என்பார் சுவாமி களுக்கு ' விசர்போக்கு ' ஆரம்பித்து விட்டது என்று கூறியதாகவும் அறிய முடிகின்றது. கிளிநொச்சியில் இருந்த காலத்தில் – தேவாரம் , திருவாசகம் , திருமந்திரம், அருணகிரியார் பாடல்கள், தாயுமானவர் பாட ல்கள், சித்தர் பாடல்கள், ஔயார் பாடல்கள், ஆகியவற்றை மனனம் செய்திருக்கிறார் என்றும் அறிய வருகிறது.

சுவாமிகளின் வாழ்கையில் அவரது இருபத்தைந்தாவது வயது குறிப்பிடத்தக்க காலம் எனலாம். அவர் வேலையை விட்டு யாழ்மண்ணுக்கு வருகிறார். இலங்கை வந்த வீரத்துறவி சுவாமி விவேகானந்தரைக் காணும் பேறும் அவருக்கு வாய்க்கின்றது. சுவாமி விவேகானந்தருக்கு யாழ் மண்ணில் கொடுக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் பங்குபற்றும் வாய்ப்பும் கிடைக்கிறது.

இராமகிருஷ்ண பரமஹம்சரிடத்தும் , விவேகானாந்தரிடத்தும் , இராமகிருஷ்ண அமைப்பிலும் சுவாமிகளுக்கு மிகுந்த நம்பிக்கையும் ஈடுபடும் இருந்தது எனலாம். மயில்வாகனம் என்னும் மட்டுநகர் பெரும கன் இராமகிருஷ்ண அமைப்பில் இணைய விழைந்த வேளை அவரை ஆசீர்வதித்து வரவேற்று நின்றவர் யோகர் சுவாமிகளாவர். அந்த மயில்வாகனே பிற்காலத்தில் முத்தமிழ் வித்தகராய் முகிழ்த்த 'சுவாமி பிபுலானந்த ' அடிகள் ஆவர்.

' எப்பவோ முடிந்த காரியம் '
' முழுவதும் உண்மை '
' நாமறியோம் '
' முழுவதும் உண்மை '

இவையாவும் உபநிடத வாக்கியங்களின் மொழி பெயர்ப்புப்போல் தென்படுகிறதல்லவா ? ஆம் .... யாழ் மண்ணில் வந்து நின்ற மகா சித்தரான செல்லப்பா சுவாமிகளின் உள்ளத்தினின்றும் வெளிவந்த வாக் கியங்களே இம் மகா வாக்கியங்களாகும். இவற்றை உபநிடதம் அல்லால் வேறு என்ன வென்று சொல்ல முடியும் !

நல்லூர் தெரிவில் சிரித்தபடி திரிந்தார். வெறித்த பார்வையராய் இருந்தார். வேடம் எதையுமே விரும்பினர் அல்லர். கறுப்பு நிற மேனியும் , கந்தையுமே அவரடையாளம். அவரைப் பித்தன் என்று மற்றவர்கள் பேசித் திரிவார்கள். அவரை நாடி வந்தால் வந்தவரைப்பார்த்துச் சீறுவார். வீதியால் செல்லுபவர்களைப் பேசுவார். புகழ்சியே இகழ்ச்சியோ எல்லாவற்றையும் ஒன்றாகவே எடுத்துக்கொள்ளுவார். திருநீறு அணிய மாட்டார். நெற்றியில் பொட்டும் இருக்காது. முதல் கூறியதைத் திரும்பக் கூறாதவர். சாதியை , சமயத்தைப் பேசி சங்கடத்துக்குள் அகப்படாதவர். இப்படியெல்லாம் இருந்தவர்தான் நல்லூர் தேரடியில் இருந்த பெரு ஞானி , சித்தர் , செல்லப்பராவர்.

அந்த ஞானியை யோகர் சுவாமிகள் 1904 ஆம் ஆண்டில் நல்லூர் தேரடியில் காணுகிறார். ' டேய் நீ யார் ' என ஒரு உலுக்கு உலுக்கி ' ஒரு பொல்லாப்பும் இல்லை ' என்று உறுமினார். ' தேரடாவுள் ' , ' தீரடா பற்று ' , என்னும் உபதேசங்கள் அங்கு அவருக்குக்

தொடர்ச்சி 5 ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்மண்ணின் யோக புருஷர் யோக சுவாமிகள் !

4ம் பக்க தொடர்ச்சி ...

கிடைத்தன. செல்லப்பரின் உறுமல் யோகர் சுவாமி களைக் கட்டிப் போட்டது.

ஞானதேசிகனைச் சந்தித்ததும் அதனால் தன்னுள் ஏற்பட்ட பரிபூரண நிலையையும் சுவாமிகள் பாட்டாகவே காட்டியுள்ளார்.

‘ இருவருந் தேடிக் காணா இறைவன்
என்போல் உருத்தாங்கி
இணங்கி யெவரும் வணங்கும்
நல்லையில் இன்னான் இவனென்ன

ஒருவரு மறியா தோடியுலாவி உவகை
பூத்த முகத்தினராய்

ஒருநாள் என்றனை உற்று நோக்கி ஓர்
பொல்லாப்பு மில்லையென்று

அருவமுங் காட்டி உருவமுங் காட்டி
அப்பாற் கப்பாலாம்

அருள்நிலை காட்டிக் காட்டிக் காட்டிக்
அந்த மாதி யில்லாச்

சொரூபமும் காட்டிச் சும்மா விருக்கும்
சூட்சுமத்தில் மாட்டிவிட்டான்

துன்பம் இறந்தன இன்பம் இறந்தன
சோதிசோதி சிவசோதி ‘

உபதேசம்கிடைத்தும்சுவாமிகள்குருவை விட்டகலாதே இருந்தார். ஆனால் குருவோ அவருக்குச் சோத னைமேல் சோதனைகள் கொடுத்தார்.தேறினார் யோகர் சுவாமிகள். ஆனால் செல்லப்பரோ ஏறியே விழு ந்தார். இறுதியில்‘ இரு யானைகள் ஒரு தறியில் கட்டப்படாது ‘ என்று செல்லப்பர் கூறி சுவாமிகளைக் கலைத்துவிட்டார்.

‘ பற்றுக பற்றற்றான் பற்றினை
அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு ‘

இக்குறள் வழியில் யோகர் சுவாமிகள் இருந்தார். அதனால் குருவின் ஏச்சோ , பேச்சோ அவரை மாற்றி விடக் கூடியதாக அமையவில்லை. எல்லாமே தனக்கு வாய்த்த உபதேசம் என்று சுவாமிகள் எடுத்துக் கொண்டார்.

குருநாதர் செல்லப்பர் உடல்நலம் இல்லாது படுத்திருந்த வேளை சுவாமிகள் அவரைப் பார்க்கச் சென்றா ராம். ‘ என்ன பார்க்கப் போகிறாய் ? நில் அங்கே, உன்னைச் சிந்தித்துப் பார் ‘ . என்றாராம் செல்லப்பர். அவ்வார்த்தையுடன் திரும்பிய சுவாமிகள் அந்தப்பக்கமே போகவில்லை என்று அறிய முடிகிறது.

யோகர் சுவாமிகள் கொழும்புத்துறையில் ஒரு சிறு கொட்டிலில் தனது வாழ்வினை ஆரம்பிக்கிறார். அங்கு ஆன்மீக ஒளி அனைவருக்கும் கிடைக்கிறது.சாதி , சமய , இன , மொழி , வேறுபாடுகளைக் கடந்து பலருமே அவரை வந்து வணங்குகிறார்கள். ஆசிகளை , வாழ்த்துகளைப் பெற்று திருப்தி அடைகிறார்கள்.

யோகர் சுவாமிகளை நாம் இன்றும் நினைத்து அவருக்குக் குருபூசை வழிபாடுகள் செய்வதற்குக் கார ணம் அவரின் வாழ்வியல் முறைகளே எனலாம்.

அவரின் பூரணமான துறவு நிலை அவரை பெரும் ஞானியாய் சித்தராய் மிளிர வைத்திருக்கிறது எனலாம். பலரும் சமூகத்தில் துறவுநிலையினை மேற்கொண்டு பிரமச்சாரிகளாய் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களின் வாழ்வியலையும் யோகர் சுவாமிகளின் வாழ்வியலையும் ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமா னதன்று. அவர்களின் நிலை வேறு. சுவாமிகளின் நிலை வேறு.

‘ தமக்கென வாழா பிறர்க்குரியவராய்‘ சுவாமிகள் வாழ்க்கையை அமைத்துக்கொண் டார்.தனக்கு நாளை க்குத் தேவை என்று கருதி எதையும் அவர் வைத்திருக்க எண்ணுவதே இல்லை. அன்பர்கள் கொடுப்பதில் ஒரு சிறுபகுதியை பயன்படுத்துவார். மற்றவற்றை எல்லாம் பங்கிட்டு அளித்துவிடுவார். பணம்கூட அவ ருக்கு ஒரு பொருட்டல்ல. தேவையான பொழுது அவருக்குக் கிடைக்கும். தேவைக்கு அதிகமாக பொன் னோ, பொருளோ எதையும் சுவாமிகள் மனம் நாடுவதே இல்லை.

‘ பற்று இல்லாதவனிடத்து எல்லாப் பொருள்களும் வந்து சேரும் ‘ என்பதற்கு சுவாமிகள் அவர்கள் நல்லதோர் எடுத்துக்காட்டு எனலாம். இன்று சித்தர்கள், ஞானிகள், ஆன்மீக வழிகாட்டிகள் என்று நாட்டில் தலைவிரித்து நிற்கும் பலர் பொருள் ஒன்றே குறிக்கோளாய் மனமிருத்தி மக்களை ஏமாற்றி ஆன்மீகத் தையே இழிவு படுத்திக் கேவலத்துக்கு ஆளாகி நிற்பதை இன்று யதார்தமாகவே காணமுடிகிறதல்லவா ? ஆனால் யோகர் சுவாமிகளோ

‘பற்றினைப் பற்றா நின்றவர்‘ . பரமனைப் பற்றினார் . பண்புகளைப் பற்றினார். சமூக நலன்களைப் பற்றி னார். ஆன்மீகத்தைப் பற்றினார். அக ஒழுக்கத்தைப் பற்றினார். அன்பைப் பற்றினார். ஆறுதலைப் பற்றி னார்.

பலவித கொள்கையினை உடைவர்கள் , அரசியலில் உயர் நிலையில் இருப்பவர்கள், அரச உயர்பதவிக ளில் இருப்பவர்கள் என்று பலவகைப் பட்டவர்கள் சுவாமிகளை நாடி வருவர். வருபவர்களின் நம்பிக்கை க்கு ஊறு விளைவிக்கும் வண்ணம் நடந்திட சுவாமிகள் விரும்பியதே இல்லையாம்.இப்படி சுவாமிகள் நடப்பதால் வருபவர்கள் மனதில் – தங்களின் கொள்கையினை உடையவர்தான் சுவாமிகள் – என்னும் எண்ணம் உருவாகி விடுகிறது எனலாம்.

‘பார்க்கும் இடமெங்கும் நீக்கமறப் பரம் பொருளையே‘ சுவாமிகள் காண்பதனால் அவருக்கு வருபவர்கள் வேறுபாடுகள் தென்படுவதில்லைஎனலாம்.‘ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செய்ய வேண்டும் ‘ என்பதை வருபவர்களுக்கு சுவாமிகள் பெரும் உபதேசமாக வழங்குவார்.பஞ்சமா பாதகங்களை ஒருவன் ஒழித்தாலே வாழ்வு சிறக்கும் என்பது சுவாமிகளின் பெரு நம்பிக்கையாய் அமைந்தது. துறவு பூண்டுதான் உண்மையினை உணர வேண்டும் என்பதில்லை. இல்லறத்தே இருந்தாலும் நல்லறமாய் வாழ்க்கை யினை அமைத்துக் கொண்டால் உண்மையினை உணரலாம் என்பது சுவாமிகளின் நல்ல தொரு தத்துவ மாயும் வாழ்வியலுக்கு ஏற்ற வழிகாட்டியாயும் அமைந்தது எனலாம்.

உலகத்தைத் திருத்த முயலுதல் என்பது நாய் வாலை நிமிர்த்த முயல்வது போலாகும்.உன்னை முதலில் திருத்த முயற்சி செய்.உலகத்துக்கு நன்மைசெய்ய முற்பட்டால் நாமே அதிக நன்மையை அடைகிறோம் என்பதை நாம் அனைவருமே உணருதல் வேண்டும் என்னும் அரிய தத்துவத்தை சுவாமிகள் மொழிந்தி டுவார். இது யோகர் சுவாமிகளின் சமுதாய அக்கறையினைப் பறைசாற்றி நிற்கிறதல்லவா ? முற்றும் துறந்த பற்றற்ற சித்தரான யோகர் சுவாமிகளின் இச்சிந்தனையாலேதான் இன்றும் நாம் அவரை நினை க்கவும் பூசிக்கவுமான நிலை ஏற்படுகிறது எனலாம். துறவி என்றால் காட்டுக்குப் போய் கடுந்தவம் ஆற்று வதல்ல. நாட்டுக்குள் , நாட்டு மக்களுக்கு மத்தியில் வாழ்ந்து நாட்டுமக்களின் நல் வாழ்வுக்கு வெளிச்ச மாய் இருப்பதுதான் சரியான துறவியின் இலட்சணம் , இலக்கு என்பதைக் காட்டியவர் யோகர் சுவாமிகள் என்பதை எவருமே மறுத்துரைத்துவிட முடியாது ! அதனால்த்தான் அவரை நாடு கடந்தும் மொழி கடந்தும் இனங்கடந்து பின்பற்றிப் பல சீடர் பரம்பரையும் , நல்ல வழிகாட்டுதல்களும் மலர்ந்திருக்கின்றன என்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

யோகர் சுவாமிகளின் நெறிப்படுத்தலால் பல இளைஞர்கள் வாழ்விலே திருந்தி இருக்கிறார்கள். பொதும க்களுக்கான சேவைகளை இன்றும் யாழ்மண்ணில் செய்து கொண்டு பல உள்ளங்கள் இருக்கின்றன என் றால் அதற்கெல்லாம் வித்தாகி உரமாகி நிற்பவர் யோகர் சுவாமிகளே ஆவர். ஆண்டவன் இல்லை என்று அடித்துக் கூறியவர்கள் பலர் சுவாமிகளின் அறிவுரைகளால் ஆன்மீகத்தில் நாட்டங் கொண்டு ஆண்ட வன் புகழ் பாடும் நிலையில் வந்து நின்றார்கள் என்பதும் அறியக்கூடிய ஆனந்தமான அவசியமான தக வல் எனலாம்.

திருவாசகத்தை பெரிதும் சுவாமிகள் விரும்பினார். திருவாசகத்துள்ளும் சிவபுராணத்தை அவர் முக்கிய த்துவப் படுத்தினார். ஈழத்தில் சிவபுராணம் பள்ளிகள் தோறும் வெள்ளிக் கிழமைகளில் பிராத்தனை மண் டபத்தில் படிக்கப்படுவதற்கும் யோகர் சுவாமிகளின் வழிகாட்டலே துணையாய் அமைந்திருக்கும் என்றும் எண்ணத் தோன்றுகிறது. சிவதொண்டன் நிலையம் சுவாமிகளை நினைவூட்டிக் கொண்டே இருக்கும். இராகமாகப் பாடி திருமுறைகளை ஓதுவதில் சுவாமிகள் பெரு விருப்புடையவராக இருந்தார் எனலாம். அவரின் திருவாக்காய் மலர்ந்திருக்கும் ‘ நற்சிந்தனைகள் ‘ மிகப் பெரிய தத்துவக் கருத்துகளை உள்ளட க்கிய எமக்கு வாய்த பொக்கிஷம் என்றே சொல்லலாம்.

சித்தர் என்றால் , யோகி என்றால் , ஞானி என்றால் , சாத்திரம் சொல்லுவார். தொட்டவுடன் நோய்களைப் போக்குவார். கேட்டவற்றை உடனே கண்முன்னே வரவழைத்துக் கொடுப்பார். உருவை மாற்றுவார். சித்து க்கள் காட்டுவார். என்றெல்லாம் நாம் அனைவரும் எண்ணியே நிற்கின் றோம். இப்படியெல்லாம் செய்யும் நிலைக் கும் ஞானத்துக்கும் எந்தவித தொடர்புமே இல்லை என்பதுதான் உண்மை நிலையா கும். இதை நம்மில் பலர் அறியவில்லை எனலாம்.

யாழ்மண்ணின் யோக புருஷரான யோக சுவாமிகள் மானிடம் தளைக்க நல்ல ஆன்மீக ஒளி பாய்ச்சிட வந்த மகானாகவே விளங்கினார். அவரிடமும் எதிர்காலத்தை அறியும் ஆற்றலும் , வருகின்ற அல்லல் களை அறியும் ஆற்றலும், நிரம்பியே இருந்தது. ஆனால் அவர் அவற்றை மக்கள் மத்தியில் காட்டிசெல்வாக்கினைப்பெற்றிட ஒருநாளுமே எண்ணம்கொண்டவராக இருந்ததே இல்லை. தனது மனதுக்குப் பட்டால் சிலவேளை சில ருக்கு வழி காட்டியிருக்கிறார் என்பதை அவ ரின் வரலாற்றால் அறிந்து கொள்ள முடிகிறது.

‘பெரியோர்களை நாடுவதன் தலையாய நோக்கம் நம்மைச் சீர்படுத்துவதற்கே அன்றி வேண்டியதைப் பெறுவதற்கு அல்ல‘ என்னும் கருவினைத் தமது உள்ளத்தில் கொண்டு செயற்பட்ட படியால்த் தான் இன்றும் நாம் யோகர் சுவாமிகளை நினைத்து அவரைப் போற்றுகிறோம் எனலாம்.

# மண்ணிலிருந்து மனிதம் காத்த மாதவ யோக சுவாமிகள் !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் ... ஆஸ்திரேலியா

நல்லூரான் வாசலுக்குச் சென்றுமே விட்டால்
நமையறியா ஆனந்தம் நமக்குள்ளே பெருகும்
நல்லூரில் சித்தர்கள் தடம் பட்டதாலே
நல்லூரில் தடம்பதித்தால் நம்மயக்கம் தீரும்

தேரடியை நாமெல்லாம் பார்த்தபடி செல்வோம்
தேரடியை பேரிடமாய் கண்டாரே ஓர்மனிதர்
பித்தான செல்லப்பர் பிரதான இடமாக
நல்லூரான் தேரடியே நாடியே தேர்ந்தாரே

தன்னை மறப்பார் தன்நாமம் உரையார்
என்னவோ பேசுவார் எடுத்தெறிந்தும் ஏசுவார்
அழுக்குத் துணியோடு அவரென்றும் திரிவார்
ஆனாலும் அவருக்குள் அருளொளி இருந்தது

அருளொளி இருப்பதை ஆருமே அறியார்
அருகணைய விளைவாரை அடித்துமே ஒதுக்குவார்
ஞானத்தின் ஒளியாக நல்லூரில் இருந்தார்
நல்லதொரு சீடனைக் மனமெண்ணி நின்றார்

தேடிய சீடன் ஓடோடி வந்தான்
வந்தவனை நிந்தனை செய்தவரும் நின்றார்
சீடனோ சிக்கெனப் பிடித்துமே நின்றான்
தேரடாவுள் தீரடாபற்று மந்திரமாக வந்ததுவங்கே

எப்பவோ முடந்த காரியம் நாமறியோம்
முழுவதும் உண்மை செப்பினார் செல்லப்பர்
சீடன் கேட்டான் சிந்தை தெளிந்தான்
குருவே அவரெனச் சரணம் அடைந்தான்

சுற்றினான் சீடன் ஒதுக்கினார் குருவும்
முற்றிய விசராய் தோற்றினார் அங்கே
அடித்தார் விரட்டினார் ஆக்கினை கொடுத்தார்
அயரா நின்றார் அவரடி சீடரும்

செல்லப்பர் முடிவை நெருங்கிய வேளை
சீடர் யோகர் தேடியே சென்றார்
நில்லங்கே வார்த்தை வெளியே வந்தது
நின்றார் யோகர் உணர்ந்துமே அகன்றார்

யோக நாதன் யோக சுவாமியானார்
செல்லப்பா சித்தர் உள்ளே புகுந்தார்
கொழும்புத் துறையை கோவிலாக்கி
அமர்ந்தார் யோகர் அனைவர்க்கும் அரணாய்

சித்தம் தெளிந்தார் சித்தும் அறிவார்
வித்தைகள் தெரிந்தும் விளம்பரம் இல்லார்
மேலாம் இறையை மேலாய் எண்ணினார்
கீழாம் குணத்தை ஆழவே அழித்தார்

படித்தவர் வந்தனர் பாமரர் வந்தனர்
பிடித்ததைக் கேட்டு வாசலில் நின்றனர்
தேவைகள் அறிந்து சுவாமிகள் கொடுத்தார்
தெரிசனம் கொடுக்கா திட்டியும் அனுப்பினார்

அணுகுவார் பிணியை அறிந்துமே நின்றார்
அவரவர் அகத்தை அவரறிந் திருந்தார்
ஆணவம் மிக்கார் அவர்முன் வந்திடின்
அவர்களை வைது அனுப்பியே விடுவார்

பொருளை நாடார் அருளை நாடினார்
பொன்னைக் கொடுத்தால் பொங்கியே எழுவார்
அன்பாய்க் கொடுத்தால் அகமும் மலர்வார்
கிடைக்கும் அனைத்தையும் கொடுத்துமே மகிழ்வார்

திருமுறை அனைத்தையும் திரவியம் என்பார்
பாடிப் பாடிப் பரவசம் அடைவார்
திரு வாசகத்தை உருகியே பாடுவார்
அனைவரும் படித்திட ஆசையும் கொண்டார்

நல்லூர் என்றால் உள்ளமே உருகுவார்
நற்குரு உறைவிடம் அதுவெனப் போற்றுவார்
எல்லை இல்லாப் பற்றுங் கொண்டார்
நல்லூர் தந்த நம்யோக சுவாமிகள்

சித்தராய் இருந்தவர் தெருவெலாம் திரிந்தார்
எத்தனை பேர்கள் அவரினை அறிந்தார்
அறிந்தவர் தெளிந்தார் அகமது வெளுத்தது
அவர்முகம் கண்டதே அவரவர் புண்ணியம்

மண்ணில் இருந்து மனிதம் காத்தார்
மாதவ யோக சுவாமிகள் வாழ்வில்
எண்ணில் அடங்கா ஆற்றல் அனைத்தையும்
இயல்பினை எண்ணி ஈந்துமே உயர்ந்தார்


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# போதைப்பொருள்களுக்கு எதிராக திருமலையில் விழிப்புணர்வு பேரணி



(ஹஸ்பர் ஏ. எச்).

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்கள், சிறுவர் வள நிலையங்கள் இணைந்து போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி, செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

நாவற்சோலை சிறுவர் வள நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பேரணியில், குச்சவெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்களை சேர்ந்த இளைஞர்கள், சிறுவர்கள், பொதுமக்கள், அரச அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் உட்பட ஐநூறிற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

பேரணி நிலாவெளி பொலிஸ் நிலையத்தை அடைந்து, நிலாவெளி பொலிஸ் அதிகாரிகளிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில், நாம், எமது இளைஞர்களை, எமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வியலை பாதிக்கும் போதைப்பொருள்பாவனையை எமது சமூகத்தில் இருந்து முற்றாக ஒழிப்பதற்கு உறுதி பூண்டுள்ளோம்.

இலங்கையில் போதைப்பொருள் பாவனை காரணமாக பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் புனர்வாழ்வு முகாம்களில் சிகிச்சைபெறுவதாகத் தெரியவருவதுடன், ஆண்டுதோறும் இவ்வெண்ணிக்கை அதிகரித்துவருவது கவலைக்குரிய விடயமாகும்.

போதைப்பொருள் பாவனை காரணமாக கல்வி, பொருளாதாரம், குடும்பம், சமூக அந்தஸ்த்து, ஆயுள் போன்றவற்றை இழப்பதுடன் ஏனைய குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், உறவினர்கள் சுற்றத்தாக்கும் ஆபத்தான நபர்களாக மாற்றும் போதைப்பொருள்களை, எமது சமூகத்தில் இருந்து முற்றாக ஒழிக்கவேண்டியது சமூகப்பற்றுமிக்க இளைஞர்களாகிய எமது கடமையாக உள்ளது.

அந்தவகையில் -

- சமூகத்தின் மத்தியில் உள்ள போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு.
- சமூகத்தின் மத்தியில் போதைப்பொருள் விற்பனைக்கு எதிரான சட்ட செயற்பாடுகள்.



போன்றவற்றை இளைஞர்களாகிய நாம் முன்னெடுக்கவுள்ளோம்.

மேலும் போதைப்பொருள் விற்பனைக்கு எதிரான தண்டனைகளைக் கடுமையாக்குமாறு அரசாங்கத்தை வேண்டுவதுடன், உளப்பூர்வமாக போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனையைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், போதைப்பொருள் விற்பனையாளர்களை அடையாளம் காட்டும் நபர்களை பொறுப்புணர்வுடன் பாதுகாக்குமாறும் இலங்கை பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் எமது சமூகச்செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பையும் வழிகாட்டல்களையும் மேற்கொள்ளுமாறு வேண்டிநிற்கின்றோம்.

எமது பிரதேச இளைஞர்களை எமது சமூகத்தின் கல்வி, பொருளாதாரம் மற்றும் கலாசார எழுச்சிக்காக எம்முடன் அணிதிரளுமாறு வேண்டுகின்றோம்.

'போதை நாட்டுக்கும், வீட்டுக்கும் கேடு'

'போதைப்பொருள்பாவனையை எமது சமூகத்தில் இருந்து முற்றாக ஒழிப்போம்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து சென்ற பேரணி, ஜெய்க்கா சிறுவர் வள நிலையத்தை அடைந்து 'போதைப்பொம்மை' எரிப்புடன் நிறைவு பெற்றது.

இந்நிகழ்வில் பங்குபற்றிய இளைஞர்கள் 'நாம் இனிவரும் காலங்களில் போதைப்பொருள் வியாபாரிகளை வெளிப்படுத்துவதிலும் நாம் முன்னிற்போம் ' எனத் தெரிவித்தனர்.

இப்பேரணி, சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் வழிகாட்டலில், சிறுவர் நிதியத்தின் நிதியுதவியுடன் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்


4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## அதிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்துவதற்குவேப்பெண்ணெய் சலவைத்தூள் உள்ளிட்டவற்றை பயிர்களுக்குமருந்துவிசிறும்20லீற்றர் கொள்கலன்மூலம்விசிறவேண்டும்.

வெள்ளை ஈயின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அதனை கட்டுப்படுத்துவதற்கு விவசாயத் திணைக்களத்தின்ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். விவசாய திணைக்களத்தினை தொடர்பு கொண்டுமருந்துவிசிறுவதன்ஊடாக நோயினை கட்டுப்படுத்த முடியும். எனவும் தென்னை பயிற்செய்கை சபையின்முகாமையாளர்வைகுந்தன் குறிப்பிட்டார்.

## ஏப்ரல் 5...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களிலும், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மொனராகலை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலும் மனித உடலால் உணரப்படும் வெப்பம் கவனத்திற்கொள்ள வேண்டிய மட்டத்தில் காணப்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது

## நிறைவேற்றுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ஒருவர் நாடாளுமன்றம் மூலம்தெரிவுசெய்யப்பட்டார்.தற்போது சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாபிரேரணைவந்திருக்கிறது.

சபாநாயகருக்குஎதிராகநம்பிக்கையில்லா பிரேரணையை நாங்கள் உடனடியாககொண்டுவந்தது அல்ல. பலசந்தர்ப்பங்களில்அவர்சபையின் பொறுப்பை பாதுகாக்கத் தவறி வந்துள்ளார்.

குறிப்பாக நிகழ்நிலை காப்புச் சட்டத்தை சபையில் அனுமதிக்கும்போது,அதுதொடர்பாகஇருந்தகுறைபாடுகளைநாங்கள்சுட்டிக்காடியிருந்தபோதும் சபாநாயகர் அதனை கண்டுகொள்ளாமல் செயற்பட்டார்.

நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் 44 திருத்தங்கள்காணப்பட்டன, அதில் 31 வாசகங்களுக்கு உயர் நீதிமன்றம் திருத்தம் மேற்கொண்டிருந்தது. அந்த திருத்தங்களை முறையாக மேற்கொள்ளாமலேகுறித்தசட்டத்தை நாடாளுமன்றத்தில் அனுமதிக்க சபாநாயகர் நடவடிக்கை எடுத்தார்.

சபாநாயகரின்இந்தநடவடிக்கைக்கு நாடாளுமன்ற அதிகாரிகளும் பொறுப்பாகும். சபாநாயகர் தவறு செய்யும்போது அதனை சுட்டிக்காட்டி திருத்துவது அதிகாரிகளின் பொறுப்பாகும். அதனை அவர்கள் செய்யத் தவறி இருக்கின்றனர்.

சபாநாயகர் நிறைவேற்றுத் துறையின்தேவைக்குசெயற்படாமல் சொந்த தீர்மானம் மேற்கொண்டு செயற்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. பொலிஸ் மா அதிபர் நியமனத்தின்போது அரசமைப்பு சபையிலும் அவ்வாறே அவர் செயற்பட்டார்.

முதலாவது சார்ள்ஸ் மன்னரின் காலத்தில் பிரித்தானிய நாடாளுமன்றத்தின்சபாநாயகராகஇருந்தசபாநாயகருக்கு ஏதோவொரு விடயத்தை செய்யுமாறு மன்னன் அழுத்தம் பிரயோகித்தார். அதற்கு சபாநாயகர் பதிலளிக்கையில், எனதுகண்களுக்கு காண்பதுநாடாளுமன்றம்உத்தரவிடும் விடயங்கள். எனது செவிகளுக்கு புலனாவது நாடாளுமன்றம் உத்தர விடும் விடயங்கள். எனது நாவினால் வெளிப்படுவதுநாடாளுமன்றம்எனக்கு உத்தரவிட்ட விடயங்கள். அதனை மீறி செயற்பட எனக்கு இயலாது. அதனால்உங்களின்உத்தரவைஎன்னால் ஏற்றுக்கொள்ளமுடியாதுஎனப்பதிலளித்துள்ளார். இந்தச் சம்பவம் எமது சபாநாயகருக்கும் பொருத்தமாகும். நிறைவேற்றுத்துறையின்தேவைக்காக செயற்படாமல் சபையின் மரபுகளை பாதுகாப்பதே சபாநாயகரின் கடமை. ஆனால் சபாநாயகர் அதனை செய்ய தவறி இருக்கிறார். அதனாலே சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவரதீர்மானித்தோம்என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

## வங்குரோத்திலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நிலையிலிருந்து மீண்டு நிவாரணங்களை வழங்கக்கூடிய நிலைமை உருவாகியுள்ளது.

தற்போதும் ரூபாவின் பெறுமதி வலுவடைந்திருக்கும்நிலையில்ஜூன் மாதமளவில் டொலரின் பெறுமதி 280 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்து ரூபாயின் பெறுமதி வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் பொருட்களின்விலைகுறைவடையும். அடுத்த வருடத்தில் ரூபாயின் பெறுமதி மேலும் வலுவடையுமென எதிர்பார்க்கிறோம்.

நாங்கள் அனைவரும் மிகவும் கடினமான காலகட்டத்தைக் கடந்து வந்துள்ளோம். இந்த நிலையில் இருந்து வெளிவர பல கடினமான முடிவுகளைஎடுக்கவேண்டியிருந்தது. ஆனால்தற்போதுஓரளவுநிவாரணம் வழங்கக்கூடிய நிலையை அடைந்துள்ளோம்.

இந்த தமிழ் சிங்கள புத்தாண்டுக்குள் அரச ஊழியர்களின் சம்பளம் 10,000 ரூபாவினால் அதிகரிக்கப்படும்.அத்துடன்அஸ்வெசும வேலைத்திட்டத்தின் மூலம் சமுர்த்தித் திட்டத்தைப்போன்றுமூன்றுமடங்கு நன்மைகளை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயனாளிகுடும்பங்களின்எண்ணிக்கை பதினெட்டுஇலட்சத்திலிருந்துஇருபத்தி நான்குலட்சமாகஉயர்த்தப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

இப்படிப் பார்க்கும் போது, சிறந்த பொருளாதார நிலை இருந்தபோது கொடுத்த நிவாரணத்தைவிட, வங்குரோத்தடைந்தநாடாகமக்களுக்கு அளிக்கப்பட்ட நிவாரணம், மூன்று மடங்குஅதிகம்என்பதுதெளிவாகிறது. இந்த அனைத்து நடவடிக்கைகளின் இறுதி நன்மை நாட்டின் பொருளாதாரத்திற்கே கிடைக்கிறது. மேலும்,கடந்தஇரண்டுஆண்டுகளாக பன்முகப்படுத்தப்பட்டவரவுசெலவுத்திட்ட நிதி பயன்படுத்தப்படவில்லை. இப்போதுநாம்அந்தத்தொகையையும் வழங்கியுள்ளதோடுஅதுவும்இறுதியில் நாட்டின் பொருளாதாரத்தில் சேரும்.

எதிர்வரும்ஜூன்மாதத்திற்குப்பிறகு நாம் மேலும் முன்னேற வாய்ப்புகள் உள்ளன. நாட்டின்பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதால்மட்டும்அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடாது. ஏனெனில்இன்றுநாம்இறக்குமதிசார்ந்த பொருளாதாரமாக மாறியுள்ளோம். நம் நாட்டில் இறக்குமதியை விட ஏற்றுமதி குறைவாக உள்ளது. இந்த இடைவெளியைக் குறைக்க வெளிநாடுகளிடம் கடன்களைப் பெறுகிறோம். இந்தநிலைதொடர்ந்தால் இன்னும் 10 வருடங்களில் மீண்டும் பொருளாதார நெருக்கடியை சந்திக்க வேண்டியுள்ளது.

எனவே இந்நிலைமையைத் தவிர்க்கஉலகவங்கி,ஆசியஅபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றுடன் கலந்துரையாடி நாட்டைஏற்றுமதிபொருளாதாரத்திற்கு கொண்டுசெல்லும்வேலைத்திட்டத்தை விரைவில் ஆரம்பிப்போம். அதன் ஆரம்ப நடவடிக்கையாக விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன் அது வெற்றியடைய இன்னும் 06, 07 வருடங்கள் செல்லும்.

நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்கி ஏற்றுமதிபொருளாதாரமாக மாற்றும் நடவடிக்கையைசட்டத்தின்ஊடாகவும் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கானசட்டத்தைஎதிர்வரும்ஏப்ரல் மாதமளவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், அரசாங்கத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காகபுதியசட்டம்கொண்டு வரப்படவுள்ளதுடன், இந்தப் புதிய சட்டங்களின் ஊடாக பொருளாதார நடவடிக்கைகளைத்தொடர முடியும்.

கடந்த பொருளாதார நெருக்கடியினால்நாட்டின்அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டனர். அப்படியானால், வளர்ந்து வரும் பொருளாதாரத்தின் பலன்கள் ஒரு சிலருக்கு மட்டுமல்ல, அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# கோணேஸ்வர ஆலய நிர்வாகம் தொடர்ந்தும் இயங்கலாம் மகோற்சவம் 18 நாள்களுக்கு விமரிசையாக இடம் பெறும்

## நிர்வாக சபை தலைவர் சட்டத்தரணி டி.துஷ்யந்தன் உறுதி

திருகோணமலை திருக்கோணேசர் ஆலய நிருவாகத்துக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எவ்வித இடைக்காலத் தடையுமின்மி நிர்வாக சபை இயங்கலாம்எனமாவட்டநீதிமன்றம்தெரிவித்துள்ளது என திருகோணேஸ்வரர் ஆலயத்தின் 2023 ஆம் ஆண்டு தொடக்கம் 2026 ஆம் ஆண்டுக்கான நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் தலைவர் சட்டத்தரணி திலகரட்ணம் துஷ்யந்தன் தெரிவித்தார்.

திருகோணமலையில்செவ்வாய்க்கிழமைமாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

திருகோணணலை மேன்முறையீட்டு குடியியல் நீதிமன்றில் நீதிமுறை மீளாய்வு மனு விசாரனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எமது நிர்வாக சபைக்கு எதிரான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதுடன் இடைக்கால நிர்வாகத்துக்கு தடை விதிக்கப்பட்டு எமது நிர்வாகம் தொடர்ச்சியாக இயங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் 24 பங்குனி மாதம் 2024 தொடக்கம் தொடர்ச்சியாக 18 நாள்களுக்கு மகோற்ஷவம் வெகு விமர்சையாக இடம் பெறும் எனவும் தெரிவித்தார். (05)

# பைந்தமிழ் உறவுப்பாலம் மூலமாக மாணவர்களுக்கு உபகரணங்கள்



(வி.ரி.சகாதேவராஜா)

பைந்தமிழ் உறவுப்பாலம் வேலைத்திட்டத்தின் கீழ் மண்டூர் 14, சக்தி மகாவித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு புத்தகப்பைகள் உட்பட்ட 6 லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் கல்முனை றொட்டரிக்கழகத்தால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்விற்கு கல்முனை றொட்டரிக் கழக தலைவர் ஏ எல் ஏ. நாசர் தலைமை தாங்கினார்.

மேலும் பாடசாலை அதிபர் எஸ் .சௌசன், றோட்டரியன் மு.சிவபாதசுந்தரம், றோட்டரியன் எம் அமிர்தசங்கர் ஆகியோரும் பங்குபற்றினர்.

இதற்கான நிதி உதவி ஐக்கிய இராச்சியம் நியூமோல்டனிலுள்ள சறே தமிழ் கல்விக்கூடச் சமூகத்தால் வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் முக்கிய பிரதிநிதி அரிராஜசிங்கம் மகீதரனும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்.

இதற்கானஅனுசரணைபைந்தமிழ்உறவுப்பாலம் அமைப்பினால் வழங்கப்பட்டது. (05)



# அரச ஊழியர் விழா முற்பணத் தொகையை 20 ஆயிரம் ரூபாவாக வழங்கக் கோரிக்கை

(அபு அலா)

அரச ஊழியர்களுக்கு கடந்த பல வருடங்களாக வழங்கப்படுகின்ற 10 ஆயிரம் ரூபா விழா முற்பணத் தொகையை 20 ஆயிரம் ரூபாவாக உயர்வாக வழங்கக்கோரி அரச ஊழியர்கள்அரசாங்கத்திடம்கோரிக்கை விடுக்கின்றனர்.

நாட்டின் பொருளாதார நிலைமை நாளுக்குநாள் மாற்றமடைந்து வருகின்ற இந்நிலைமையில், கடந்த பல வருடங்களாக வழங்கப்பட்டு வருகின்ற விழா முற்பணத் தொகை அதே 10 ஆயிரம் ரூபாவாக இன்றும் இருக்கின்றது. இந்த 10 ஆயிரம் ரூபாவுக்கு இரு சேட் கூட வாங்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில்தான் இன்றைய அரச ஊழியர்களின் நிலை காணப்படுவதாகவும்அவர்கள்கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த பல வருடங்களுக்கு முன்னர் அரச ஊழியன் என்றால் அவர்களுக்கென்று ஒரு தனியான மதிப்பும், மரியாதையும், கௌரவமும் இருந்து வந்தன. இன்று அந்த நிலை, தலை கீழாக மாறியுள்ளது. இது பெரும் தாக்கத்தை எங்களுக்கு ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இன்றைய அரசும், அரசாங்கமும் அரச ஊழியர்களின் விடயங்களில் அதிக கவனம் செலுத்தி அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளை உயர்வாக வழங்கி வைப்பதன் மூலம் அரச சேவைகளை இன்னுமின்னும் உயர்வாகப் பெறுவதோடு, அவர்களுக்கு ஏற்பட்டுள்ளமனஅழுத்தத்திலிருந்தும்பாதுகாத்துக்கொள்ளலாம். (05)

# கல்முனை பொலிஸ் நிலையத்தில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனைதலைமையகபொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த வருடாந்த இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். றம்ஸீன்பக்கீர்தலைமையில்பொலிஸ் நிலையத்தின் திறந்த வெளியரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கலாநிதி சட்டத்தரணி அஜித் ரோஹண பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இப்தார் விசேட மார்க்க சொற்பொழிவுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீ, கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன், அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச். எம்.என் ஜயபத்ம, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி. எம்.எல்.புத்திக உட்பட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், இராணுவ , கடற்படை அதிகாரிகள் பொலிஸ் பரிசோதகர்கள், சர்வமத தலைவர்கள், மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு குழு அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சிவில் சமூக அமைப்பினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது kmஇல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# 8 லட்சத்து 50 ஆயிரம் பயணிகள் இந்த வருடம் இதுவரை விமான நிலைய சேவை பெற்றனர்

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 850,000 பயணிகள் விமான நிலைய சேவைகளைப் பெற்றுள்ளனர் என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் அதுல கல்கெட்டிய தெரிவித்துள்ளார்.

பயணிகளால் அதிகம் பயன்படுத்தப்பட்ட விமான நிலையமாக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் காணப்படுகிறது.

இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பயணிகள் விமான நிலைய சேவைகளைப் பெற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 2022 ஆம் ஆண்டில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் 50 லட்சம் ரூபா இலாபமீட்டிய நிலையில் கடந்த 2023 ஆம் ஆண்டில் அது 80 லட்சமாக அதிகரித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(05)

# ஒரு வாரத்தில் ஐந்து போதைப்பொருள் வியாபாரிகள் காத்தான்குடியில் கைது

காத்தான்குடியில் செவ்வாய்க்கிழமை போதை பொருள் வியாபாரிகள் இருவரைக் கைதுசெய்ததுடன், கடந்த ஒருவாரத்தில் 5 போதை பொருள் வியாபாரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைதானவர்களை நீதிமன்ற அனுமதியை பெற்று 3 நாள்கள் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருவதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

யுக்திய நடவடிக்கையின் கீழ் காத்தான்குடி பொலிஸார் போதை பொருள் வியாபாரிகளைத் தேடிக் கைது செய்துவருகின்ற நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை காலை தொடக்கம் செவ்வாய்க்கிழமை வரை 5 வியாபாரிகளை 3 கிராம் தொடக்கம் 400 மில்லிக்கிராம் வரையிலான ஐஸ் போதை பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்ட 5 பேரும் காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயது தொடக்கம் 50 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

இவர்களை நீதிமன்ற அனுமதியை பெற்று 72 மணித்தியாலயம் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை மேற்கொண்டுவருவதாகவும், விசாரணையின் பின்னர் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு வவுனியாவில் சைக்கிள் வழங்கல்



வவுனியா, மருக்காரம்பளைப் பகுதியில் 2 பிள்ளைகளுடன் வசித்துவரும் பெண்தலைமைத்துவ குடும்பம் ஒன்று பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கால் நடையாகச் சென்று தனது தொழில் நடவடிக்கைளையும், தனது வீட்டுத் தேவைகளையும் பூர்த்தி செய்து வந்தார்.

வருமானத்தின் பெரும் பகுதியைப் போக்குவரத்திற்காக செலவு செய்த நிலையில் பிள்ளைகளுடன் குடும்பத்தைக் கொண்டு நடத்த முடியாத நிலையில் அந்தக் குடும்பம் வாழ்ந்து வந்தது.

பல்வேறு சிரமங்களுடன் வாழ்ந்து வந்த குறித்த குடும்பத்தினர் ஊடகவியலாளரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக திரு திருமதி சரவணமுத்துவின் முதலாம் ஆண்டு நினைவாக கனடாவில் வசிக்கும் கலைச்செல்வி, நகுலன் பிள்ளைகளின் நிதிப் பங்களிப்பில் வாணி விஜயபாலாவின் அனுசரணையில் உதயம் கனடா அமைப்பின் ஊடாகத் தொழில் நடவடிக்கைக்கு செல்வதற்காக சைக்கிள் ஒன்று வழங்கிவைக்கப்பட்டது.

வவுனியா, வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலயத்தில் வைத்து குறித்த சைக்கிள் வழங்கி வைக்கப்பட்டது.

(05)

# 2 பெண்களுடன் போதைப்பொருள் விருந்து நடத்திய இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள்

## மொரட்டுவையில் சம்பவம்

மொரட்டுவை , கட்டுபெத்த பிரதேசத்தில் உள்ள விடுதியொன்றில் போதைப்பொருள் விருந்து நடத்திய இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் இரு பெண்களும் போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொரட்டுவை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அங்குலான பொலிஸ் நிலையத்தில் கடமை யாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரொருவரும் தெஹியத்தகண்டிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவமே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

அங்குலான பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரிடமிருந்து ஒரு கிராம் ஹஸிஸ் போதைப்பொருளும் , தெஹியத்தகண்டிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரிடமிருந்து 20 மில்லிகிராம் ஹெரோயினும் , இரு பெண்களிடமிருந்து 260 மில்லிகிராம் போதைப்பொருளும் மற்றும் 40 மில்லிகிராம் ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட தெஹியத்தகண்டிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் இருக்கும்போதே இந்த போதைப்பொருள் விருந்தை நடத்தியதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(05)

# இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)



நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சின் இழப்பீடுகளுக்கான அலுவலகம் அம்பாறை மாவட்ட செயலகத்துடன் இணைந்து 'நம்பிக்கைக்கான நூல்' மற்றும் 'வாழ்க்கைக்கானவெளிச்சம்' திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்த வாழ்வாதார உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ஆர்.ராகுல நாயகியின் வழிகாட்டலுக்கு அமைய உதவி பிரதேச செயலாளர் பி. பிரணவரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், நீதி அமைச்சின் இழப்பீடு களுக்கான பணிப்பாளர் அனுராதி பெரேரா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கிருபைராஜா திலகராணி, மாவட்ட இழப்பீட்டிற்கான உத்தியோகத்தர் எம்.ஆர். ஆஸாத் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் போது, கைத்தறி நெசவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் நெசவு உற்பத்திக்கு தேவையான மூலப்பொருள்கள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் மெழுகுவர்த்தி உற்பத்திசெய்வதற்காக தெரிவுசெய்யப் பட்ட பயனாளிகளுக்கு பயிற்சிகள் மற்றும் உற்பத்தி இயந்திரங்கள் என்பனவும் வழங்கிவைக் கப்பட்டன. (05)

# இரண்டு உழவு இயந்திரங்கள் மோதி மாத்தளையில் விபத்து

## ஒருவர் இறப்பு; இருவர் காயம்!

மாத்தளை, வில்கமுவ பிரதேசத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (புதன்கிழமை) அதி காலை 2.20 மணியளவில் மதவாச்சியிலிருந்து அம்பாறை பிரதேசத்திற்கு மரக்கன்றுகளை வெட்டுவதற்காக பொருள்களை ஏற்றிச் சென்ற இரண்டு உழவு இயந்திரங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.



இந்த இரண்டு உழவு இயந்திரங்களில் ஒன்று தொழில்நுட்ப கோளாறு காரணமாக, சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல் மற்றைய உழவு இயந்திரத்துடன் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் உயிரிழந்தவர் புளியங்குளம் பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடைய இளைஞராவார். (05)

# வறட்சியான வானிலை இன்று முதல் மாற்றம்

நாட்டில் தற்போது நிலவும் வெப்பமான வானிலையில் இன்று முதல் மாற்றம் ஏற்படுமென வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி கிழக்கு, ஊவா மற்றும் வடக்கு மாகாணங்களில் மழை பெய்யக் கூடிய சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

மேற்கு, சப்ரகமுவ, மத்திய , ஊவா, தெற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் மாலையிலோ அல்லது இரவு நேரத்திலோ மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.03.2024இல் வெளியிடப்பெற்றது